**இலங்கை பௌத்த மற்றும் பாலி பல்கலைக்கழகம் - 2019**

---

## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை பௌத்த மற்றும் பாலி பல்கலைக்கழகத்தின் 2019 ஆம் ஆண்டு டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்களின் மாற்றங்கள் கூற்று மற்றும் அன்றைய திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான காசுப்பாய்ச்சல் கூற்று, நிதிக் கூற்றுகளுக்கு ஏற்புடையதான குறிப்புகள் மற்றும் சாராம்சப்படுத்திய முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் என்பவற்றைக் கொண்டமைந்துள்ள 2019 ஆம் ஆண்டு திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான நிதிக் கூற்றுகள் , இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பில் 154(1) உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 ஆம் ஆண்டு 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டம் மற்றும் 1971 ஆம் ஆண்டு 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வுச் செய்யப்பட்டது. பாராளுமன்றத்திடம் சமர்ப்பிக்கவேண்டுமென கருதுகின்ற எனது கருத்துக்கள் மற்றும் அவதானிப்புகள் இவ்வறிக்கையில் குறிப்பிடப்படுகின்றது.

இவ்வறிக்கையில் 1.5 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்ந்து, இலங்கை பௌத்த மற்றும் பாலி பல்கலைக்கழகத்தின் 2019 ஆம் ஆண்டு டிசெம்பர் 31 ஆந் திகதியில் நிதிசார் நிலைமையினையும் அன்றைய திகதியில் முடிவடையும் ஆண்டுக்கான அதன் நிதி செயலாற்றினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இவ்வறிக்கையில் 1.5 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களைக் கொண்டு எனது அபிப்பிராயம் மேற்கொள்ளப்படுகிறது.

இலங்கை கணக்காய்வு தரநியமம்படி (இ.க.த.நி) பிரகாரம் என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இந்த கணக்காய்வு தரநியமம்படி எனது பொறுப்பு, இவ்வறிக்கையில் நிதிக்கூற்றுகளின் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை வழங்கும் பொருட்டு என்னால் பெற்றுக்கொண்டுள்ள கணக்காய்வு சாட்சிகள் போதுமானதும் பொருத்தமானதெனவும் நம்புகின்றேன்.

## 1.3. நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது பல்கலைக்கழகத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கல்வி நிறுவனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் பல்கலைக்கழகத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக் கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4. நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

---

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக பல்கலைக்கழகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு பல்கலைக்கழகத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில்

குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் பல்கலைக்கழகத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயன்ற வரை தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரிசோதனை செய்வதற்கு கணக்காய்வு விடயவெல்லையும் விரிவாக்கப்பட்டுள்ளது.

- தகவல் சமர்ப்பித்தல் தொடர்பானவிடத்து பல்கலைக்கழகத்தின் கடமைகள் தொடர்ச்சியாக மதிப்பீட்டுக்கு உட்படும் வகையில் அதன் ஒழுங்கமைதல், முறைமைகள், திட்டங்கள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய கடித ஆவணங்கள் முறையாகவும் போதுமான அளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும், குறித்த முறைமைகள், திட்டங்கள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய கடித ஆவணங்கள் பயனுள்ளவாறு பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- ஏதேனும் எழுத்தினாலான சட்டத்திற்கு அல்லது பல்கலைக்கழகத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட ஏதேனும் பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்கியொழுகி நிறுவனம் செயற்பட்டுள்ளது எனவும்.

- தமது தத்துவங்கள், பணிகள் மற்றும் கடமைகளுக்கு இணங்கியொழுகி செயலாற்றப்பட்டுள்ளது எனவும்,

- வளங்கள், காலவரையறைகளினுள்ளும் ஏற்புடையபாலனவான சட்டங்களுக்கு இணங்கியொழுகவும் சிக்கனமாகவும், வினைத்திறனாகவும், பயனுறுதியாகவும் பெறப்பட்டுப் பயன்படுத்தப்பட்டுள்ளது எனவும்,

## 1.5 நிதிக் கூற்றுகள்

---------------------

### 1.5.1 நிதிக் கூற்றுகள் தயாரித்தல் தொடர்பான உள்ளக கட்டுப்பாடு

----------------------------------------------------------------------------

கொடுக்கல்வாங்கல் முகாமைத்துவத்தில் பொதுவான மற்றும் உறுதியான அதிகாரத்துடன் செயற்படல், உரியதான அறிக்கையிடல்களை நியமங்களுக்கு ஒழுங்கமைவாக தயாரிப்பதற்கு தேவையானவாறு கொடுக்கல்வாங்கல்களை பதிவு செய்தல், சொத்துக்களுக்கான கணக்கீட்டு நெறிமுறை பேணிச் செல்லுதல், முகாமைத்துவத்தின் பொதுவான மற்றும் உரிய அதிகாரத்துவத்துடன் மட்டும் சொத்துக்களை அணுகுதல், குறிப்பு வைக்கப்பட்ட சொத்துக்களுக்கான கணக்கீட்டு நெறிமுறை தற்போதுள்ள சொத்துக்களுடன் நியாயமான காலப் பகுதிக்குள் ஒப்பிடுதல், வேறுபாடுகள் இருப்பின் அவை தொடர்பாக உரியவாறு நடவடிக்கை எடுத்தல்

என்பவற்றுக்கு நியாயமான உறுதியினை பெற்றுக்கொள்வதற்கு போதியளவிலான ''சிறப்பாக திட்டமிடப்பட்ட'' உள்ளக கணக்கீட்டு கட்டுப்பாட்டு முறைமையை நிறுவனத்தால் பேணிச்செல்லுதல் அத்தியாவசியமாகும்.

**1.5.2 இலங்கை அரச துறை கணக்கீட்டு தரநியமங்களுக்கு ஒழுங்கமையாமை.**

| சம்பந்தப்பட்ட தரத்துடன்கூடிய தொடருடன் ஒழுங்கமையாமை | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு தரநியமம் 07 இல் 65 ஆவது பந்தி பிரகாரம் நடைமுறையல்லாத சொத்து-க்களில் பயனுள்ள ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்யாமை காரணமாக செலவு ரூபா. 66,615,099 ஆன மரப் பொருட்கள் மற்றும் உபகரணங்கள் முற்றுமுழுதாக தேய்-மானம் செய்திருப்பினும், மேலும் பயன்படுத்துவதை காணக்கூடியதாக இருந்தது. அதன்டி மதிப்பிடப்பட்ட குறைப்பாடு இலங்கை அரச துறை கணக்கீட்டு தரநிமங்கள் 03 இன்படி மீள்திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொண்டிருக்கவில்லை. | பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றுநிருப இலக்கம் 649 இன்படி நடைமுறையல்லாத சொத்து-க்களின் பயனுள்ள ஆயுட்காலம் மதிப்பிடப்பட்டுள்ளது. அதேபோ-ன்று அந்த தரத்தின் பிரகாரம் மரப் பொருட்கள் மற்றும் உபக-ரணங்கள் என்பன மீள்கணிப்பீடு செய்வதற்கு எதிர்பார்க்கப்படு-கின்றது என்பதை மேலும் குறிப்பிட விரும்புகின்றேன். | பொது துறை கணக்கீட்டு தரநியமங்கள்படி நடவடிக்கை மேற்-கொள்ளுதல் வேண்டும். |

**1.5.3 கணக்கீட்டு குறைப்பாடுகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| கற்கை வளாகத்தில் மின்னாக்கி இயந்திரமொன்றின் 2018 ஆம் ஆண்டுக்கான தேய்மானம் ரூபா. 17,350 ஆயினும், அது ரூபா. 17,349,067 ஆக கணக்கு வைத்ததன் காரணமாக தேய்மான ஒதுக்கீட்டுக் கணக்கில் ரூபா.17,331,717 ஐ நிதிக் கூற்றுகளில் அதிகமாக காட்டப்பட்-டிருந்தது. அந்தப் பிழையை மீளாய்விற்கான ஆண்டில் காலம் கடந்ததாக சீராக்காமை காரணமாக தேறிய சொத்துக்கள், பொறித்-தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் என்பன அத் தொகையால் குறைவாக காண்பிக்கப்பட்டிருந்தது. | அந்த பணத் தொகைக்கு ஏற்புடையதாக 2018 ஆம் ஆண்டின் தேய்மானம் கணக்கி-டுகையில் நிலையான சொத்து-க்களின் பதிவேட்டில் சரியாக குறிப்பிடப்பட்டுள்ளதுடன், தேய்-மானம் சீராக்கும் பதிவேடு ரூபா. 17,349.67 இற்குப் பதிலாக ரூபா.17,349,067.00ஆக கணினி-மயப்படுத்துகையில் பிழை ஏற்பட்டுள்ளது என்பதை ஏற்றுக்-கொள்கின்றேன். 2020 ஆம் ஆண்டில் இதனை செவ்வை-யாக்கப்பட்டுள்ளது. | காலம் கடந்ததாக மீண்டும் சீராக்கப்பட்டு பிழையினை செவ்வை-யாக்குதல் வேண்டும். |

## 1.6 கிடைக்கப்பெறுவனவைகளும் செலுத்தப்பட வேண்டிய கணக்குகளும்

### 1.6.1 செலுத்தப்பட வேண்டிய தொகை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| 2015 தொடக்கம் 2017 ஆம் ஆண்டு வரையிலான காலப் பகுதிக்கு ஏற்புடையதாக 08 நிறுவனங்களிடம் சீராக்கப்பட வேண்டிய மொத்தம் ரூபா. 1,700,120 ஆன பிடிபணம் மீளாய்விற்கான ஆண்டு இறுதி வரை சீராக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை. | அரச பொறியியற் கூட்டுத்தாபனத்திற்காக ஒப்பந்த அடிப்படையில் பிடிபணமாக வைத்துக்கொள்ளுதல் தொடர்பானவிடத்து, ரூபா. 936,514.00 ஐ மகோபாத்ய அவர்களின் உத்தியோகபூர்வ இல்லம் நிருமாணிக்கையில் ஏற்பட்டுள்ள குறைப்பாடுகளை செவ்வையாக்கும் வரை வைத்துக்கொள்ளப்பட்டுள்ளது.<br><br>இலக்ட்ரோ மெட்ல் பிரேசின்ஸ் நிறுவனத்தில் ரூபா.489,933.00 ஆன தொகை 2020 ஆம் ஆண்டில் சீராக்கப்படவுள்ளது.<br><br>சுகித் டிசயின் எண்ட் கன்ஸ்ட்ரக்ஷன் நிறுவனத்தில் ரூபா. 56,548.00 ஆன பணத் தொகை நிருமாணிப்பு நடவடி-க்கைகள் முடிவடையும் வரை வைத்துக்கொள்ளுதல் வேண்டும். எஞ்சிய பிடிபணம் தொடர்பாக சீராக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. | உரிய மீதிகளை பகுப்பாய்வு செய்து விடுவிப்பதற்கு அல்லது வருமானத்தில் வைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |

## 1.7 சட்டங்கள், விதிகள், ஒழுங்குவிதிகள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் என்பவற்றுக்கு ஒழுங்கமையாமை

| சட்டங்கள், விதிகள், ஒழுங்குவிதிகள் என்பவற்றின் தொடர் | ஒழுங்கமையாமை | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி ஒழுங்குவிதி கோவை | | | |
| நிதி ஒழுங்குவிதி கோவை **371 (2) (ஆ)** | நிமித்தக் கட்டுநிதி முற்பணம் பொருட்டு தயாரிக்கப்பட்ட மதிப்பீடுகளில் உள்ளடக்கப்பட்டுள்ள அலுவல்களை உரியவாறு நிறைவேற்றப்படாமை காரணமாக 17சந்தர்ப்பங்களில் வழங்கியிருந்த மொத்தம் | சம்பந்தப்பட்ட அலுவல்களின் பொருட்டு எதிர்பார்க்கும் செலவினங்களை அடையாளம் காணப்பட்டு மதிப்பீடுகள் தயாரிக்கப்படும். ஆயினும், கட்டுப்பாட்டுச் சபை, ஏனைய துணைக் குழுக் கூட்டங்கள் மற்றும் நேர்முகப் பரீட்சைகளின் | நிதி ஒழுங்குவிதி பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ரூபா. 475,200 ஆன முற்பணங்களில் 41% தொடக்கம் 100% இடையில் முற்பணம் மீள சீராக்கப்பட்டிருந்தது. | பொருட்டு சில நேரங்களில் உறுப்பினர்கள் சமூகமளிக்காமைமீது மதிப்பிடப்பட்ட மொத்த முற்பணம் உபயோகிக்கப்படுவதில்லை. அதேபோன்று சில சந்தர்ப்பங்களில் சம்பந்தப்பட்ட துணைக்குழு கூடுவதற்கு உள்ள கிட்டிய திகதி இரத்துச் செய்வதன் காரணமாக முற்றுமுழுதாக முற்பணம் மீண்டும் தீர்க்கப்படுதல் வேண்டும். | |
| (ஆ)பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர் கல்வி நிறுவனங்களுக்கான தாபன விதிக் கோவையில் 111 ஆவது அத்தியாயத்தில் 26.1 உப பிரிவு | கற்கைநெறி பொருட்டு பொருத்தமான பல்கலைக்கழக ஆசிரியர்களை ஆட்சேர்ப்புச் செய்ய வேண்டுமென்பதுடன், அவ்வாறு இல்லாவிடின் புதிய கற்கைநெறிகளை ஆரம்பிக்கப்படுதலாகாதென குறிப்பிட்டிருக்கையில் பல்கலைக்கழகத்தில் அங்கீகரிக்கப்பட்ட 12 விரிவுரையாளர் பதவிகளில் வெற்றிடங்கள் நிலவுகையில் மீளாய்விற்கான ஆண்டில் 24 வெளியக விரிவுரையாளர்களை ஆட்சேர்ப்புச் செய்து ரூபா. 4,668,363 தொகை விரிவுரை கட்டணங்களாக செலுத்தப்பட்டிருந்தது. | கற்கை லீவுகள், ஏழாண்டு வருடாந்த லீவுகள் பெற்றுள்ள ஆசிரியர்களால் மேற்கொள்கின்ற பாடங்களுக்கும் மற்றும் தற்போது வெற்றிடங்களாக நிலவும் பல்கலைக்கழக ஆசிரியர் பதவிகளுக்கும் வெளியக விரிவுரையாளர்களை ஆட்சேர்பபுச் செய்துள்ளதுடன், பீடாதிபதிகள் மற்றும் கற்கைப் பிரிவுகளின் தலைவர்களை இது தொடர்பாக அறிவுறுத்தப்பட்டுள்ளதுடன், ஆகக் குறைந்த விரிவுரையாளர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கு தேவையான நடவடிக்கை மேற்கொள்வதற்கு கற்கை பிரிவுகளால் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. அதேபோன்று தொல் பொருளியல் போன்ற மிக விசேடமான பாட விடயங்களின் பொருட்டு வளவாளர்களை வெளியகத்தில் பெற்றுக்கொள்ளப்படுகின்றது. | வெற்றிடங்களை நிரப்புவதற்கு துரிதமான நடவடிக்கைகளை மேற்கொண்டு வெளியக விரிவுரையாளர்களின் பொருட்டான செலவுகளை குறைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |

## 2. தொழில்பாட்டு மீளாய்வு

----------------------

### 2.1 நிதிசார் விளைபயன்

--------------------------

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுகள் பிரகாரம், மீளாய்விற்கான ஆண்டில் நிதிசார் விளைபயன் ரூபா. 40,787,889 ஆன பற்றாக்குறை காணப்பட்டதுடன், அதற்கு நேரொத்ததாக கடந்த ஆண்டின் பற்றாக்குறை ரூபா. 2,187,367 ஆகும். அதன்படி நிதிசார் விளைபயன் ரூபா. 38,600,522 ஆன வீழ்ச்சியடைதல் காணப்பட்டது. இந்த வீழ்ச்சியடைதலுக்கு மீண்டுவரும் செலவினங்களுக்கான அரசாங்க நன்கொடை ரூபா. 110,188,000 ஆன அதிகரிப்புடன் ஒப்பிடுகையில் கற்கை படிகள் ரூாப. 31,289,746 மற்றும் பணிக்கொடை படிகள் ரூபா.54,919,183 ஆன அதிகரிப்பு பிரதான காரணங்களாக அமைந்திருந்தன.

## 3. தொழில்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ வினைத்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) வெளியக விரிவுரையாளர்கள் ஊடாக பேணி வந்த மொழி திறன் அபிவிருத்தி கல்வி பிரிவில் 04 வெளிநாட்டு மொழி கற்கை நடவடிக்கைகளின் பொருட்டு 2016 ஆம் ஆண்டில் ஆட்சேர்ப்புச் செய்த 03 விரிவுரையாளர்களுக்கு 03 ஆண்டுகள் முடிவடைவதற்கு முன்னர் 05 ஆண்டுகள் வரை கற்கை லீவுகள் வழங்கப்பட்டு மீண்டும் வெளியக விரிவுரையாளர்களின் சேவை பெற்றுக்கொள்வறத்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. | அதேபோன்று பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் உயர் கல்வி நிறுவனங்களுக்கான தாபன விதிக் கோவையில் III ஆவது அத்தியாயத்தில் 21 ஆவது உப பகுதியில் 21.1.1 இன்படி தகுதிகாண் நிலையில் உள்ள எல்லா பல்கலைக்கழக ஆசிரியர்களும் மூன்று ஆண்டுகளிலான ஆரம்ப தகுதிகாண் காலப் பகுதிக்குள் பட்ட நிலை பின் படிப்பு (ஆராய்ச்சிப் பகுதியும் அடங்கலாக மிகப் பொருத்தமான) பொற்றுக்கொள்ளுதல் வேண்டுமென பொதுவாக எதிர்பார்க்கப்படுகிறது. அந்த பிரிவால் அனுமதி வழங்கியுள்ள ஆறு ஆண்டுகளிலான தகுதிகாண் காலப் பகுதிக்குள் பட்டநிலை பின் படிப்பு பட்டம் பெற்றுக்கொள்வதற்கு தவறினால் நிருவாக அதிகார சயையால் அவர்களின் சேவை முடிவுறுத்தப்படுதல் வேண்டும், என்று குறிப்பிடப்பட்டுள்ளது.<br><br>அதன்படி தகுதிகாண் காலத்தில் இருந்த பல்கலைக்கழக ஆசிரியர்களுக்காக கற்கை லீவு வழங்கப்படுதல் வேண்டும். | வெற்றிடங்களின் பொருட்டு ஆட்சேர்ப்புகளை மேற்கொண்டு வெளியக விரிவுரையாளர்களுக்கான கொடுப்பனவுகளை குறைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |
| (ஆ) தேவைகளின்படி கொள்வனவு செய்யாமை காரணமாக அச்சீட்டு இயந்திரங்களின் பொருட்டு பயன்படுத்தும் ரூபா. 188,189 பெறுமதியான 24 மை மற்றும் காட்டிரேஜ் உருப்படிகள் ஓராண்டுக்கு அதிகமான காலம் தொடக்கம் மற்றும் ரூபா. 112,853 பெறுமதியான 586 உருப்படிகள் 3 ஆண்டு-கள் தொடக்கம் 05 ஆண்டுகள் வரையிலான காலப்பகுதி வழங்கப்படாது களஞ்சியத்தில் காணப்பட்டது. | சில டுப்லோ இயந்திரங்கள், அச்சீட்டு இயந்திரங்கள் மற்றும் பெக்ஸ் இயந்திரங்கள் என்பவற்றுக்காக களஞ்சியத்தில் சேமித்து வைத்துள்ள 24 மை மற்றும் காட்டிரேஜ்களை மேலும் சேமித்தல் வேண்டுமா என்று அவற்றை பயன்படுத்தும் பிரிவுகளிடம் உறுதிப்படுத்திக் கொண்டதன் பின்னர் அகற்றுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இவை விரைவாக விநியோகிக்கப்படும் உருப்படி அல்ல என்பதை அறிவித்துக்கொள்கின்றேன். | தேவையினை அடையாளம் காணப்பட்டு கொள்வனவுகளை மேற்கொள்வறத்கு கவனம் செலுத்தப்படல் வேண்டும். |

## 3.2 தொழில்பாட்டு வினைத்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| (அ) இலங்கை பௌத்த மற்றும் பாலி பல்கலைக்கழக சட்டத்தில் 4 (XV) பிரிவுபடி வாடகை மற்றும் குத்தகை அடிப்படையிலேனும் வதிவிட வசதிகளை பெற்றுக்கொள்வதற்கு வசதிகள் இருக்கையில் அதனை கவனத்தில் கொள்ளாது பல்கலைக்கழகத்தின் வதிவிடங்களில் இடவசதி போதுமற்றதென குறிப்பிடப்பட்டு வருடாந்தம் ஆட்சேர்ப்புச் செய்கின்ற மாணவர்களின் எண்ணிக்கை மட்டுப்படுத்துவறத்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. அதன்படி 2015 ஆம் ஆண்டு தொடக்கம் கடந்த 5 ஆண்டு காலப் பகுதிக்குள் பல்கலைக்கழக கற்கை பொருட்டு 1,752 மாணவர்கள் விண்ணப்பம் செய்திருந்ததுடன், அவர்களுக்கிடையில் 37% அல்லது 652 பேர் மட்டும் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டிருந்ததுடன், பல்கலைக்கழகத்திற்கு சொந்தமான 2000 இற்கு மேற்பட்ட மாணவர்களுக்கு போதுமான ஆற்றலுடன்கூடிய விரிவுரை மண்டபங்கள் மற்றும் போதியவு வசதிகள் இருந்த போதிலும், ஆண்டொன்றுக்கு ஆட்சேர்ப்புச் செய்கின்ற மாணவர்களின் எண்ணிக்கை 110 – 140 இற்கும் இடைப்பட்ட எல்லைக்குள் இருந்தமை அவதானிக்கப்பட்டது. | வருடாந்தம் ஆட்சேர்ப்புச் செய்கின்ற மாணவர்களின் எண்ணிக்கை 2015/16 ஆண்டில் 110 தொடக்கம் 2019/20 ஆண்டை கவனத்தில் கொள்கையில் 140 வரை அதிகரித்துக்கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் பல்கலைக்கழகத்தால் மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஆட்சேர்ப்புச் செய்கின்ற மாணவர்களின் எண்ணிக்கை மட்டுப்படுத்தல் பல்கலைக்கழகத்தால் மேற்கொள்ளப்படுவதில்லை. வருடாந்தம் விண்ணப்பிக்கும் மாணவர்களின் எண்ணிக்கையில் அதிகமானோர் இணையான வேறு நிறுவனங்களில் சேர்ந்துள்ளனர். அதேபோன்று ஒரு மாணவர் பொருட்டான செலவுகளை குறைத்துக் கொள்ளும் நோக்கத்தில் தற்போதுள்ள வளங்களை கவனத்தில் கொண்டு மாணவர்களின் எண்ணிக்கையை 200 வரை அதிகரித்துக்கொள்வதற்கு அமைச்சிடம் வேண்டுகோள் முன்வைத்திருப்பினும், முன்னரான ஆண்டுகளில் ஆட்சேர்ப்புச் செய்த எண்ணிக்கையினரை ஆட்சேர்ப்புச் செய்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. | பல்கலைக்கழகத்தில் உள்ள வளங்களில் ஆகக்கூடிய பயன்களை பெற்றுக்கொள்ள முடியுமானவாறு ஆட்சேர்ப்பு செய்கின்ற மாணவர்களின் எண்ணிக்கை அதிகரிப்பதற்காக கவனம் செலுத்தப்படல் வேண்டும். |
| (அ) கடந்த 05 ஆண்டு காலப் பகுதிக்குள் 428 உள்ளக பட்டமளிப்புகளை ஒப்பிடுகையில் 1716 வெளியக பட்டமளிப்புகளை வழங்கியதன் காரணமாக பல்கலைக்கழகத்திற்குரிய வளங்களை பயன்படுத்தி உள்ளக பட்டமளிப்புகளை வழங்குவதிலும் பார்க்க வெளியக பட்டமளிப்புகள் வழங்கவதன்மீது கூடிய கவனம் செலுத்தியிருந்தமை அவதானிக்க கூடியதாக இருந்தது. | ஓராண்டில் உயர்தரம் சித்தியடைகின்ற மாணவர்களைக் கொண்டு உள்ளக மாணவர்களை ஆட்சேர்ப்புச் செய்யப்படுகிறது. சட்டம் பிரகாரம் துறவி மாணவர்கள் மற்றும் சாதாரண ஆண் மாணவர்களை மட்டும் ஆட்சேர்ப்புச் செய்யப்படுகின்றது. ஆயினும் வெளியக மாணவர்களை ஆட்சேர்ப்புச் செய்தல் தொடர்பாக சட்டம் பிரகாரம் அவ்வாறான எல்லைகள் இல்லாத படியால் ஒப்பீட்டு ரீதியாக அதிகளவிலான மாணவர்களின் எண்ணிக்கை வருடாந்தம் பதிவு செய்யப்படுகிறது. | பல்கலைக்கழகத்தில் உள்ள வளங்களில் ஆகக் கூடிய பயன்களை பெற்றுக்கொள்ள முடியுமானவாறு ஆட்சேர்ப்புச் செய்கின்ற மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்துக்கொள்வதற்கும், உரிய காலப் பகுதிக்குள் பட்டப் படிப்புகளை பூர்த்தி செய்வதற்கும் தேவையான பின்னணியை உருவாக்குதல் வேண்டும். |

## 3.3 நிதியங்களின் குறை பயன்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
| --- | --- | --- |
| பௌத்த கல்விக்கு மற்றும் பாலி மொழிக்கு வரையறுக்கப்பட்ட ஆராய்ச்சிகளுக்கு உதவி அளிப்பதற்காக தாபிக்கப்பட்டுள்ள ஜியுன் பௌத்த ஆராய்ச்சி மற்றும் வெளியீட்டு நிதியம் மீளாய்விற்கான ஆண்டில் திசெம்பர் 31 ஆந் திகதியில் ரூபா. 1,300,000 ஆனதுடன், 2017 ஆம் ஆண்டு தொடக்கம் உரிய நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்வதற்காக பயன்படுத்தப்பட்டிருந்தது. | இந்த நிதியம் பயன்படுத்தும் வாய்ப்புகளை விரிவாக்கி கொள்வதற்காக நிதியத்தின் அளவுகோல்களை திருத்தம் செய்து கட்டுப்பாட்டுச் சபையில் அங்கீகரிக்கப்பட்டது. அந்த புதிய அளவுகோல்கள்படி நிதியம் உபயோகப்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது. | பல்கலைக்கழகத்தின் நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்வறத்கு ஏற்புடையதாக நிதியங்களின் உபயோகத்தை முறைசார்படுத்தல் வேண்டும். |

## 3.4 கருத்திட்டங்கள் அல்லது மூலதன வேலைகளின் தாமதங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
| --- | --- | --- |
| பல்கலைக்கழகத்தின் கொழும்பு வளாகத்தில் ஐந்து மாடிகளைக் கொண்ட கட்டிடம் நிருமாணிப்பதற்காக ரூபா.மில்லியன் 307.5 ஆன பொறியியல் மதிப்பீடுகளின்மீது கட்டுமான மற்றும் பெறுகை முறையின்கீழ் 2017 ஆம் ஆண்டு யூலை மாதத்தில் ரூபா. 548,902 தொகை அலோசனை கட்டணங்களாக செலவிடப்பட்டிருந்தது. தெரிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரருக்கு மீளாய்விற்கான ஆண்டில் திசெம்பர் 05 ஆந் திகதி ரூபா. 14,508,834 தொகை வேலை தொடங்குவதற்கு முற்பணமாக செலுத்தப்பட்டிருப்பினும். 2020 யூலை மாதம் 17 ஆந் திகதியிலும் நிருமாணிப்பு பணிகள் ஆரம்பிக்கப்படவில்லை. இந்த பெறுகை மற்றும் ரூபா மில்லியன் 219 தொகை பெறுகைகளின் பொருட்டு தொழிநுட்ப மதிப்பீட்டுக் குழுக்களுக்கு நேர்வரிசை அமைச்சின் பிரதிநிதியாளரை நியமனம் செய்வதற்குப் பதிலாக ஓய்வு பெற்ற மேலதிக செயலாளரை நியமனம் செய்யப்பட்டிருந்தது. | இந்த கருத்திட்டம் கொழும்பு 07 பௌத்தாலோக்க மாவத்தையில் அநைம்துள்ளது. அந்த பிரதேசம் அதிபாதுகாப்பு வலயமாவதால் இதன் நிருமாணிப்புகளை தொடங்குவதற்கு முன்னர் நகர அபிவிருத்தி அதிகார சபை மூலம் அனுமதி பெற்றுக் கொள்ளுதல் வேண்டும். அனுமதி கிடைக்கப்பெற்ற பின்னர் நிருமாணிப்புகளை ஆரம்பிக்கப்படவுள்ளது. | பெறுகை வழிகாட்டலின்படி நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்பதுடன், நிருமாணிப்புகளை துரிதப்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கை மேற்கொள்ளுதல் வேண்டும். |

## 3.5 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்விற்கான ஆண்டில் திசெம்பர் 31 ஆந் திகதியில் பல்கலைக்கழகத்தில் அங்கீகரிக்கப்பட்ட பணியாற்தொகுதி 211 ம் உண்மையான பணியாற்தொகுதி 186 ம் ஆகியதால் 25 வெற்றிடங்கள் காணப்பட்டன. அதன்படி கல்விசார் பணியாற்தொகுதியில் 12 பதவிகளும் அங்கீகரிக்கப்பட்ட நிருவாக பதவிகளில் உதவி பதிவாளர் பதவியொன்று மற்றும் சிரேட்ட உதவி பதிவாளர் பதவியொன்று மற்றும் நூலகர் ஆகிய பதவிகளில் வெற்றிடங்கள் காணப்பட்டன. | 07 பேராசிரியர் பதவிகளின் பொருட்டு முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அனுமதிமீது 2020 ஆண்டுக்காக இரண்டு விரிவுரையாளர் பதவிகளாக முடக்கப்பட்டது. அந்த விரிவுரையாளர் பதவிகளின் பொருட்டு ஆட்சேர்ப்புச் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.<br><br>நூலகர் 01-2019 ஆண்டில் பத்திரிக்கை அறிவிப்புகள்மூலம் விண்ணப்பங்கள் கோரப்பட்டன. பல்கலைக்கழக மானி-யங்கள் ஆணைக்குழுவின் சுற்றுநிரு-பங்கள் பிரகாரம் ஆகக் குறைந்த புள்ளிகளையாவது பெறவில்லை.<br><br>கௌரவ மகோபாத்திய தேரர் அவர்களாக, சமய கல்வி மற்றும் ஒப்பீட்டு தத்துவ கல்விப் பிரிவின் பேராசிரியர் தேரர் அவர்களின் நியமனம் காரணமாக வெற்றிடமாகியுள்ளது. பதவிகாலம் முடிவடைந்த பின்னர் மீண்டும் பேராசிரியர் பதவியில் கடமை பொறுப்பேற்பதனால் அந்த பதவி பூர்த்தியாகின்றது.<br><br>விரிவுரையாளர் (பயிலுநர்) பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டிருப்பினும், உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டுள்ளதால் அந்த பதவி நிரப்புவதற்கு இயலாதுள்ளது.<br><br>விரிவுரையாளர் (பயிலுநர்) மற்றும் கணினி ஆலோசகர் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. | பல்கலைக்கழக நடவடிக்கைகளை வினைத்திறமையுடன் பேணிச் செல்வதற்காக வெற்றிடங்களின் பொருட்டு ஆட்சேர்ப்புகளை மேற்கொள்ளுதல் வேண்டும் |

## 4. கணக்கீட்டு நெறிமுறை மற்றும் நல்லாளுகை

### 4.1 வரவு செலவு கட்டுப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்விற்கான ஆண்டில் 05 செலவு விடயங்களில் உண்மை-யான செலவினம் ரூபா.மில்லியன் 110.4 ஆகியதுடன், மதிப்பிடப்பட்ட செலவினம் ரூபா.மில்லியன் 66.8 ஆகியதால் மதிப்பிடப்பட்ட செல-வினம் மற்றும் உண்மையான செலவினம் என்பவற்றுக்கிடையில் 19% ம் 225% இற்கும் இடையிலான ஏற்றத்தாழ்வு காணப்பட்டது. | மதிப்பீடுகளை மீண்டும் திருத்தம் செய்யப்பட்டதுடன், சம்பள அதிகரிப்-பிற்கு போதியளவு ஒதுக்கீடு மட்டும் மேலதிகமாக வழங்கப்பட்டுள்ளது. | செலவினங்கள் மற்றும் வருமானம் சரியாக எதிர்வு கூறப்பட்டு மதிப்பீடு-களை தயாரித்தல் வேண்டும். |

### 4.2 நிலையான அபிவிருத்தி நோக்கங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் அபிப்பிராயம் | பரிந்துரை |
|---|---|---|
| நிலையான அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் ஆண்டு 2030 "நிகழ்ச்சி நிரல்" பிரகாரம் ஒவ்வொரு அரச நிறுவனத்தாலும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்பதுடன், மீளாய்விற்கான ஆண்டுக்கு ஏற்புடை-யதாக பல்கலைக்கழகத்தால் தமது விடயவெல்லைக்குள் வருகின்ற விடயங்கள் தொடர்பில் எவ்வாறு செயற்படுதல் வேண்டுமென அறிந்தி-ருப்பினும், நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடைந்துக்கொள்-வதற்கு தயாராகும்போது ஏனைய நிறுவனங்ளுடன் சிறந்த கூட்டிணை-ப்பை மேற்கொள்ளாமை காரணமாக இலக்காக கொண்ட நோக்கங்களை அடைந்துக்கொள்வதற்கான திட்டங்-களை தயாரித்தல் மற்றும் முன்தயார் செயற்பாடுகள் மிகவும் மந்தகதியில் நிலவியமை அவதானிக்கப்பட்டது. | இது தொடர்பாக எதிர்கால நடவடிக்கைகளை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கு 117 ஆவது கணக்காய்வு மற்றும் முகாமை-த்துவ குழு பரிந்துரைகள்மீது குழுவொன்றை நியமனம் செய்வத-ற்கான கட்டுப்பாட்டுச் சபை பத்திரம் அனுப்பி வைக்கப்பட்டு-ள்ளது. | நிலையான அபிவி-ருத்தி இலக்கு-களை அடைந்து கொள்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும். |